<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC. 28/2025

அரசுதரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாஸ்கரன் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | IAS |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 07.10.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை–**

நான் தமிழ்நாடு கடல் சார் வாரியத்தில் துணைத்தலைவராக பணிபுரிந்து கடந்த ஏப்ரல் 2022 ல் பணி ஓய்வு பெற்றேன். தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். கடந்த 2019 ஜீலை முதல் நகராட்சி ஆணையர் பதவியில் கூடுதல் பொறுப்பாகவும் 25.09.2019 முதல் மே மாதம் 2021 வரை தனிப்பொறுப்பாகவும் கவனித்து வந்தேன். அவ்வாறு பணிபுரிந்த காலத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை இயக்குனரகம் கடித எண் RC 2015/LB/CL. Dated 14.02.2019 தேதியிட்ட கடிதம் என்னுடைய பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் அந்த கோப்பினை ஆய்வு செய்த போது கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகராட்சியில் 2013– 2014 ஆண்டுக்கான வறட்சி நிவாரண பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் முறைகேடு நடந்ததாக லஞ்ச ஒழிப்பு துறைக்கு புகார் வரப்ட்டு அதன் மீது ஒரு விரிவான

விசாரணை லஞ்ச ஒழிப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை TE 72/2024/ LB /CL, அறிக்கை அனுப்பப்பட்டுஅதன்அடிப்படையில் கடலூர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் கடந்த 02.03.2015 அன்று முதல்தக வல் அறிக்கை எண் 2/2015 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கில் விருத்தாசலம் நகராட்சியுடைய முன்னால் இளநிலை பொறியாளர் திரு.சி.பாண்டு அவர்கள் மற்றும் 14 ஒப்பந்ததாரர்கள் மீது நிதி முறைகேடு தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. வறட்சி நிவாரண பணிகளுக்காக விருத்தாசலம் நகராட்சியில் 35 போர்வெல்கள் போடுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது, அதில் 34 ஆழ்துளை கிணறுகளுக்கு தலா 3 லட்சம் வீதமும், ஒரு ஆழ்துளை கிணறுக்கு ரூ.10 லட்சம் வீதம் மொத்தமாக 1 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் போடப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்படி பணிகளில் அளவீட்டுபுத்தகங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகளுக்கும் களத்தில் உள்ள அளவீடுகளுக்கும் மிகுந்த வேறுபாடு மற்றும் தரம் குறைந்த பொருட்களை உபயோகித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த பணிகளின் தரங்கள் குறித்து விசாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சிறப்பு குழுவின் அனுமதி பெறப்பட்டு மேற்படி குழு கடந்த 27, 28, 29 அக்டோபர் 2014 தேதிகளில் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பித்துள்ளனர். அந்த அறிக்கையில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த ஆழ்துளை கிணறுகளை இந்த வறட்சி நிவாரண பணிகளின் கீழ் கணக்கில் எடுத்துக்கொண்டும், தேவையான அளவினை விட குறைவான அளவுகள் எடுத்து ஆழ்துளை கிணறு இடப்பட்டு மேலும், ஆழ்துளை கிணறுகளுடைய PVC Casing பைப்புகள் குறைவான அளவுக்கு

தரச்சான்று பெறாத மின் மோட்டார்களை பொருத்தியும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட GI பைப்புகளுக்கு பதிலாக விலை குறைந்த PVC பைப்புகளை இணைத்தும் தரச்சான்று பெறப்படாத  நீர்தேக்க தொட்டிகளை அமைத்தும், குறைபாடு உடைய பணிகளை மேற்கொண்டதன் மூலம் அரசுக்கு சுமார் 31 லட்சத்து 98 ஆயிரத்து 672 ரூபாய் இழப்பீடு செய்தது கண்டறியப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக சி.பாண்டு, உதவி பொறியாளர், விருத்தாசலம் நகராட்சி அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 167,  477A, 420 & 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) r/w  13 (1)(c) ஆகிய பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் அவர் மீது வழக்கு தொடங்க என்னிடம் முன் அனுமதி கேட்டு கடிதம் பெறப்பட்டது. மேற்படி இளநிலை பொறியாளர் திரு.பாண்டு அவர்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு உள்ளதால் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 19(1)(c) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்படி குற்றசாட்டுகளுக்கு முகாந்திரம் இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் செயல் முறை ஆணை எண் ROC No.30876/2014/V1, Dt. 23.09.2019 தேதியிட்ட ஆணைக்கு 25.09.2019 அன்று முழு கவனத்தினையும் செலுத்தி தன்னிச்சையாக முடிவு எடுத்து இந்த செயல் முறை ஆணைக்கு ஒப்புதல் வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் வழங்கிய இசைவு ஆணை தான். அது அ.த.சா.ஆ.1 ஆக SplCC.36/2025 ல் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக ஊழல் தடுப்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து எந்த தேதியில் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது என்று தேதி எனக்குத் தெரியாது.

என்னுடைய அலுவலகத்திலிருந்து தபால் வந்தால் அதற்கு A section, B Section என்ற பிரிவுகள் இருக்கும் என்றால் DVC தபால்களை பொருத்த வரையில் நாங்கள் தான் பிரித்து பார்வையிட்டு படித்து பார்ப்போம். என் பார்வைக்கு எந்த தேதியில் பெறப்பட்டது என்று தற்போது குறிப்பாக தேதி சொல்ல முடியவில்லை. தபால் பிரித்து பார்வையிட்டு எனக்கு எந்த ஊழியரும் குறிப்பு எழுதி வைக்கவில்லை, நானே தான் பிரித்து பார்த்தேன். 13.09.2019 அன்று மேற்படி தபால் எனக்கு along with enclosures என்று வந்தது என்றால் ஆமாம். அதில் என்ன என்ன இணைக்கப்பட்டிருந்தது என்றால்விசாரணை அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலம், குற்றம்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தது. இந்த விவரங்களை அலுவலகத்தில் இருந்த சம்பந்தப்பட்ட கோப்புகளை பார்த்து குறிப்பு எடுத்துக்கொண்டு அதன்படி சாட்சியமளிக்கிறேன். இதர ஆவணங்கள் என்ன என்ன என்றால் சாட்சிகளின் வாக்குமூலங்கள், குற்றம்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை அளவீடு புத்தகங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இறுதி அறிக்கை, சிறப்பு குழுவின்இறுதி அறிக்கை, போன்ற ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. மேலும் என்ன என்ன ஆவணங்கள் வந்தன என்று கோப்புகளை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். மற்ற ஆவணங்களை பற்றி குறிப்பு எடுக்கவில்லை என்றால் நான் வழக்கிற்கு தேவையான குறிப்புகளை எடுத்து வந்தேன். Sanction Order எப்படி இருக்க வேண்டும் என்று மாதிரி எனக்கு அனுப்பினார்களா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்ன என்ன தவறு செய்துள்ளார்கள், குறைபாடுகள் செய்துள்ளார்கள் என்ற விவரங்களை

Sanction Order குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் செய்த தவறுகளை எதை வைத்து சாட்சியம் அளித்தேன் என்றால் நான் எடுத்து வந்த குறிப்புகளை வைத்து சாட்சியமளித்தேன். அந்த தவறுகளை பாண்டு என்பவர் தான் செய்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. அளவீடு புத்தகங்களை எழுதியவர் பாண்டு தான். அளவீடு புத்தகங்களில் அவர் எழுதியவற்றை சரிபார்த்து மேல் அளவு செய்து சரி என A.E.E. மேல் அளவு செய்து ஒப்புதல் அளித்துள்ளார் என்றால் சரிதான். 2013–2014 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட பணி ஆகும். பணி 2014 வருடமே முடிந்தது. பணிகள் 2013–2014 ஆண்டில் பல்வேறு காலக்கட்டங்களில் முடிவுற்றிருந்தது. 35 ஆழ்துளை கிணறு பணி என்பதால் சிறுது அதிகமான காலம் கூட ஆகியிருக்கலாம். தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், கடலூர் தரக்கட்டுப்பாடு பொறியாளர் தலைமையில் குழு 2014 அக்டோபர் 27, 28, 29 ஆகிய தேதிகளில் பார்வையிட்டனர். அந்த குழு அறிக்கை எந்ததேதியில் கொடுத்துள்ளார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை. வேலை முடிந்து இரண்டு வருடங்கள் கழித்து தான் பார்வையிட்டனர் என்றால் சரியல்ல. 2013–2014 ல் முடிந்த பணியினை இரண்டு வருடங்கள் கழித்து பார்வையிடும் போது அந்த அளவுகள் இயற்கை காரணமாக மாறியிருக்கும் என்றால் சரியல்ல, 2014 வருடத்திலேயே பார்வையிட்டனர். நான் அது போல் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அது போன்ற தவறான அறிக்கையின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் தன் மீது தவறு இல்லை என்று தான் சொல்லியுள்ளார் என்றால் பரிசீலனை செய்தேன், தற்போது நினைவில்லை. எதிரி என்ன விளக்கம் மற்றும் வாக்குமூலம்

கொடுத்திருந்தாலும் அது சம்பந்தமாக அதனை ஏற்றுக்கொண்டு செயல்பட எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அது போல் எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. எனக்கு மறுப்பதற்கு அதிகாரம் இல்லை என்பதால் தான் நான் என் மனதினை செலுத்தாமல் வேறுவழி இல்லாமல் நான் இயந்திர தனமாக இந்த இசைவு ஆணை கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

விருத்தாசலம் நகராட்சியிலிருந்து இது சம்பந்தமான கோப்புகளை வரவழைத்து நான் பார்த்தேனா என்றால் இல்லை. பொதுவாக 100 அடிக்கு அளவீடு செய்யும் போது 80 அடி ஆழத்திலேயே தண்ணீர் கிடைத்தால் கண்டிப்பாக 100 அடி வரை துளையிட வேண்டுமா எ ன்றால் அது குறித்து பொறியாளர் தான் சொல்ல முடியும். 35 ஆழ்துளை கிணறுகளுக்கு வறட்சி நிவாரணை நிதிகளுடன் சேர்த்து மற்ற பொது நிதிகளையும் சேர்த்து தான் கொடுத்துள்ளார்கள். நிதிகள் ஒதுக்கீடு செய்தது குறித்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் நிதிகள் சரியாக தான் வழங்கப்பட்டுள்ளது,ஒப்பந்த புள்ளி கோரியதிலும், பெற்றதிலும் எந்த குறைபாடும் இல்லை, ஒப்பந்தம் பெறப்பட்டு பணிகள் செய்ததில் தான் முறைகேடு நடந்திருந்தது. ஒப்பந்தம் படி பணப்பட்டுவாடா நடைமுறை படி சரியாக தான் நடந்துள்ளது. 35 ஆழ்துளை கிணறுகள் சரியாக போடப்பட்டு தண்ணீர் சரியாக வருகிறது என்றால் அது பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியாது.